**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 36/2024**

| | | | |
|---|---|---|---|
| | | DEPOSITION OF WITNESS | PW.2 |
| NAME | கோபி | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 26.03.2026.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வரவில்லை என்றால் சரிதான். வழக்கு விவரங்கள் எனக்கு எப்படி தெரியும் என்றால் நரசிம்மர் சொல்லி தெரியும். என்னிடம் காட்டப்படும் முதல் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது. நவீன்குமார் 2007ம் ஆண்டிலிருந்து காணவில்லை.

2. எங்கிருந்து நவீன்குமார் காணாமல் போனார் என்றால் அவர் வீட்டிலிருந்து வேலைக்கு செல்வதாக சென்று அதன் பிறகு காணாமல் போனார். எந்த ஊர் அல்லது எந்த மாநிலத்திற்கு அல்லது எந்த நாட்டிற்கு வேலைக்காக சென்றபோதும் காணாமல்போனார் என்றால் ஆந்திரா, மற்றும் தமிழ்நாட்டில் வேலைக்கு செல்வதாக சென்று காணாமல்போனார். நவீன்குமார் எனது நண்பர்.

3. காணாமல் போனதாக சொல்லும் 2007ம் ஆண்டுக்கு முன்பு நவீன்குமார் எங்கு வேலைக்கு போனார் என தெரியுமா என்றால் தெரியாது. என்ன வேலைக்கு போவார் என தெரியுமா என்றால் அவர் ஐடிஐ படித்துள்ளார் அது தொடர்பான வேலைக்கு செல்வார். குறிப்பிட்டு எந்த துறைசார்ந்த வேலைக்கு செல்வார் என தெரியாது. செல்லும்போது என்னிடம் என்ன சொல்லிவிட்டு போனார் என்றால் ஆந்திராவின் விசாகப்பட்டினம் மற்றும் சென்னைக்கு சென்று வேலை தேடுவதாக சொல்லிவிட்டு போனார்.

4. குறிப்பிட்டு எந்த வேலையும் அவர் செய்யவில்லை என்றால் சரிதான். நவீன்குமார் காணாமல் போனதாக அவரது அப்பா போலிசில் எப்போது புகார்

கொடுத்தார் என தெரியுமா என்றால் 2016ல் கொடுத்தார். எங்கு தேடிப்பார்த்தோம் என்றால் நாங்கள் விசாகப்பட்டினம் சென்று 4 நாட்கள் தங்கி அவரைத் தேடிப்பார்த்தோம். 2008முதல் 2010ம் ஆண்டுக்குள் விசாகப்பட்டினத்தில் தேடிப்பார்த்தோம். விசாகப்பட்டினத்தில் காவல் நிலையத்தில் விசாரித்தோமா என்றால் விசாரிக்கவில்லை.

5. எனக்கு இந்த வழக்கு பற்றியும் நவீன்குமார் காணாமல் போனது பற்றியும் எந்த விவரமும் தெரியாது என்றாலும் நவீன்குமார் எனது நண்பர் என்பதால் அவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் தவறானவை என்றாலும் அதனால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்றால் சரியல்ல.

ஒம்/– K.கார்த்திக் அசாத்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.